**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 74/2016

நாள் 12.06.2023

பெயர். தருமன் த/பெ. நடேசன்

வா.சா2 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இல்லை டிரஸ்ட்டில் நானும் ஒரு உறுப்பினர். இவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் கோவிலை நிர்வாகிப்பதாக காண்பிப்பததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் போட்டுள்ளேன். மேற்படி பத்திரம் என்ன பத்திரம் என்று எனக்கு தெரியுமா என்றால் கோவில் பேரில் உள்ள பத்திரமாகும்.

2. நான் அன்றாட நிர்வாகிக்கும் வரவு செலவு கணக்கில் ஏதேனும் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் அன்றாடம் வரவு செலவு கணக்கு பார்க்கமாட்டார்கள் மாதத்தில் ஒரு நாள் தான் பார்ப்பார்கள் அதில் நான் எப்போதவாது கையொப்பம் செய்வேன். மேற்படி நான் கையொப்பம் செய்ததை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கோவில் கட்டுவதற்காக நன்கொடை வாங்கி ரசீது, கட்டுமான சமான்கள் வாங்கி ரசீது மற்றும் கோவில் கட்டியதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. கோவில் கட்டப்பட்டுள்ள நிலம் தற்போது யார் பேரில் இருக்கிறது என்றால் 2003 ஆண்டு கோவில் கட்டும்போது ஒரு முதலியார் பேரில் இருந்தது அவருடைய பெயர் எனக்கு ஞாபகமில்லை தற்போது யார் பேரில் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. கோவில் கட்டப்பட்டுள்ள நிலத்திலன் பட்டா யார் பேரில் இருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு தொகை முதல் போட்டதாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வட்டாட்சியர் அலுவகத்தில் இருதரப்பிலும் அழைத்து கூட்டம் போட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். காவல் நிலையத்தில் இருதரப்பினர் பேரிலும் தனித்தனியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கோட்டாட்சியர் அவர்கள் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டார்கள்.

ந. தருமன்

Scanned with OKEN Scanner

5. கோவிலுக்கு மின் இணைப்பு வழங்க கோரி மனு அளித்தது சம்மந்தமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மின் கட்டணம் யார் பேரில் வாங்குகிறார்கள் என்று தெரியுமா என்றால் சாட்சி எனக்கு அந்த பெயர் சரியாக வரவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். எனது பிரமாணவாக்கு மூலத்தில் பத்தி 6 முதல் 10 வரை சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

6. வாதி ஆரம்பித்ததாக சொல்லும் டிரஸ்ட்க்கு எவ்வளவு தொகை போட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதி ஆரம்பித்ததாக சொல்லும் டிரஸ்ட்க்கு நான் எவ்வளவு தொகை போட்டேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி நாங்கள் ஆரம்பித்ததாக சொல்லும் டிரஸ்ட்க்கு கீழ் கோவில் நிர்வாகம் நடைபெறுவதாக காண்பிக்க ஆவணம் ஏதேனும் இருக்கிறாதா என்றால் போடு எழுதி வைத்தோம் அதை அடித்துவிட்டார்கள். அரசிடமிருந்தோ அல்லது நீதிமன்றத்திலிருந்தோ உத்தரவு ஏதேனும் வாங்கியுள்ளோமா என்றால் உயர்நீதிமன்றத்திலிருந்து உத்தரவு வாங்கியுள்ளோம்.

7. கோவிலுக்கு கொடுக்கும் நன்கொடையை யார்யார் கொடுத்தர்கள் என்ற விவர கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதெல்லாம் எனக்கு ஞாபகமில்லை. கோவிலுக்கு நிரந்த உபயதார்கள் யாரேனும் இருக்கிறார்காளா என்றால் இல்லை. கோவிலுக்காக வாதியின் டிரஸ்ட் பேரில் நாகப்பன் என்பவரிடமிருந்து சுமார் ரூ1,50,000/- மேல் தொகை கொடுத்து நிலம் வாங்கினோம். மேற்படி கிரய தொகையான ரூ1,50,000/- த்தை யார் நன்கொடையாக கொடுத்தார்கள் என்றால் இரண்டு நபர்கள் கொடுத்தார்கள் அவர்கள் பெயர் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி சொத்து வாங்கியதற்கு வரவு செலவு கணக்கு வைத்துள்ளோமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் கூறுவது போல் எங்கள் அறக்கடளை கீழ் மேற்படி கோவில் இல்லை என்றால் சரியல்ல. கோவில் நிர்வாகத்தை நாங்கள் பார்த்து வந்தால் வரவு செலவு கணக்கு எங்களிடம் இருக்குமென்றாலும் நான் வழக்கிற்காக வரவு செலவு கணக்கு பார்ததாக பொய் சொல்கிறேன் என்றால் 2017 ஆண்டு வரை நாங்கள் கோவிலை நிர்வாகித்து வந்தோம் அதன் பிறகு எங்களை அடித்து துறத்திவிட்டார்கள் அதிலிருந்து கோவிலுக்கு சென்று வந்துவிடுவோம்.

8. 2017 வருடத்திற்கு முன்பும் கோவில் நிர்வாகித்தற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கிரயம் வாங்கி சொத்தில்

வ. தங்கவேல்

Scanned with OKEN Scanner

வருவாய் ஏதேனும் வருகிறாதா என்றால் அது காலிமனையாகும். திருவிழா மற்றும் உச்சவ விழா செய்வதற்கு வரவு செலவு கணக்கு ஏதேனும் தாகக்ல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எங்கள் நிர்வாகத்திற்கும் கோவிலுக்கும் எந்த சம்மந்தமோ இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மீது உள்ள தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த அமைதி கூட்டத்தில் கோவில் நிர்வாகம் யாரிடமிருந்ததோ அவர்களிடம் கோவிலை ஒப்படைந்துவிட்டார் என்றால் அது செல்லாது என்று தான் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அலைகழிக்க வேண்டுமென்று அவதூறாக போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

Taken Down before by me in open court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

P.T. 12.06.23

District Munsif
Arni.